Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

போன் 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபால் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ தை 17 ஆம் நாள் ஷஃபான் 23 | (30-1-62) | செவ்வாய்க்கிழமை | இதழ் 301

"அரசாங்கத்தை கவிழ்க்க சதி"

# சுதந்திரகொண்டாட்டம்

## ரத்து செய்யப்பட்டது

## முன்னாள் கடற்படை தலைவருக்கு கைது உத்தரவு

### பார்லிமெண்டைக் கூட்ட எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

குறிப்பிட்ட சில உயர்தர ராணுவ, பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்தை வீழ்த்தும் நடவடிக்கையை மேற்கொண்டு கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அனுராதபுரத்தில் பெப்ரவரி 4ந் தேதி நடைபெறவிருந்த சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன. ஆனால் மாவட்டங்களில் வழக்கம்போல் சுதந்திரக் கொண்டாட்டங்கள் நடைபெறும்.

7 அதிகாரிகள் நேற்று கைதுசெய்யப்பட்டனர். மற்றோர் அதிகாரி மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும், ஆனால் அவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

### 7 பேர் கைது

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஸி. ஸி. திஸ்ஸநாயகா, உதவிப் பொலிஸ சுப்ரிண்டன் திரு. எஸ். ஸி. வீரசிங்க, உதவி பொலிஸ் சுப்ரிண்டன் திரு. ஜோன் புள்லே, கர்னல் எப். ஸி. டி' சேரம், கர்னல் மொரிஸ் டி' மெல், லெப்டினட் கர்னல் ஜேசுதாசன், முன்னாள் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி டி' சொய்ஸா ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முன்னாள் கடற்படை கமாண்டர் ராய்ஸ் டி மெல் மீது தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும் அவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது. அனுராதபுரத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ரத்துச்செய்யப்பட்டதுபற்றி உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா அறிவித்தார்.

### கவர்னர் ஜெனரல் பிரகடனம்

நேற்றிரவு கவர்னர் ஜெனரல் வெளியிட்ட விசேஷ கெஸட் உத்தரவில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள் கட்டாயம் பதிலளிக்கவேண்டும் என்ற அம்சம் அடங்கியுள்ளது. பிரதமரது சிபார்சின் பேரில் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் 5வது பிரிவுப்படி கவர்னர்-ஜெனரல் இப்பிரகடனத்தை விடுத்துள்ளார். பொலிஸ் பகுதியினர், அல்லது ராணுவ, கடல், விமானத் தளபதிகளின் அதிகாரம் பெற்ற எந்த அதிகாரியும் கேட்கும் கேள்விகளுக்கு காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் பதிலளிக்கக் கட்டுப்பட்டவர்களாவர்.

### 'பார்லிமெண்டை உடனடியாகக் கூட்டுக'

தற்போதைய நிலையை முன்னிட்டு பார்லிமெண்ட் உடனடியாகக் கூடவேண்டுமென சகல எதிர்க்கட்சிகளும் விரும்புகின்றன. பார்லிமெண்ட் ஏற்கனவே பெப்ரவரி 13ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். பார்லிமெண்டை உடனடியாகக் கூட்டுமாறு பிரதமருக்குத் தாம் விசேஷ வேண்டுகோள் விடுக்கப்போவதாய் எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா கூறினார்.

லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, உடனடியாகப் பார்லிமெண்டைக் கூட்டுமாறு பிரதமருக்குத் தந்தி அடித்துள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன, கம்யூனிஸட் கட்சித்தலைவர் திரு. பீட்டர் கெனமன், டாக்டர் நாகநாதன் ஆகியோரும் பார்லிமெண்ட் உடனடியாகக் கூடவேண்டும் என்ற கருத்தையே தெரிவித்தனர்.

## மந்திரிகளுக்கு பாதுகாப்பு?

கொழும்பு, திங்கள்

மந்திரிசபை இன்று கூடி மந்திரிகளுக்குப் பொதுவான பாதுகாப்பு அளிப்பதுபற்றி ஆலோசித்தது. தற்போதைய சூழ்நிலைபற்றியும் அது விவாதித்ததாக அறிவிக்கப்படுகிறது. எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கிணங்க பார்லிமெண்டின் அவசரக் கூட்டம் வெள்ளிக்கிழமை மட்டும் நடைபெறலாமெனத் தெரிகிறது.

## தமிழ் எம். பிக்கள் மீது உள்ள வழக்கு மார்ச் 12ம் தேதி ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

சட்டவிரோதமாகக் கூடியதாக தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 4 எம். பி.க்கள் மீதும் மற்றொரு வழக்கறிஞர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கே மாற்றும்படி கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் திரு. என். ஏ. டி. எஸ். விஜயசேகரா முன்னிலையில் கோரப்பட்டது. சென்ற பெப்ரவரி 20ந் தேதி சத்தியாக்கிரக இயக்கத்தின் போது யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்னிலையில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவத்தையொட்டி இவ்வழக்கு தொடரப்பட்டது.

எதிரிகள் சாபர்ாக ஆஜரான திரு. திருச்செல்வம் கியூ. ஸி, தனது கட்சிக்காரர்களுக்கு இந்தக் கோர்ட்டில் ஆஜராகும்படி கோரப்பட்டது ஏன் என்பது தெரியாதென்றும், அட்டோர்ணி ஜெனரலின் உத்தரவுப்படியே இவ்வாறு செய்யப்பட்டதாய்க் கருதுவதாயும், இது நீதிவிவகாரத்தில் தேவையற்ற தலையீடு எனக் கருதுவதாயும் கூறினார். குற்றம் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதியிலுள்ள நீதிமன்றத்தில்தான் விசாரணை நடைபெற வேண்டுமென சட்டம் கூறுவதாயும் அவர் கூறினார். எனவே வழக்கை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றவேண்டுமெனவும் அவர் கோரினார்.

அவசரகாலச்சட்ட விதிகளின்படி இந்த உத்தரவு விடுக்கப்பட்டதாய் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எப். பி. டி. பிரேமரத்ன கூறினார்.

இறுதியில் மாஜிஸ்டிரேட் மார்ச் 12-ம் தேதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

## ராஜன்பாபு மே மாதம் ஓய்வு பெறுவார்

புதுடில்லி, ஜன. 2

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரஸாத் வருகிற மே மாதம் 12-ம் தேதி பதவியைவிட்டு விலகுவார். இறுதிக் காலத்தை அவர் சேவாக்கிராமம், சபர்மதி, சதாகட் ஆகிய ஏதாவதொரு ஆச்சிரமத்தில் இருந்து தொண்டு செய்வதின் மூலம் கழிப்பார். சதாகட்டில் அவர் தங்குவதற்காக சிறிய குடிசை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. தாம் வாழ்நாளில் சேகரித்து வைத்த 16,000 நூல்களை சதாகட் ஆசிரமத்துக்கு ராஜன் பாபு நன்கொடையளித்துள்ளார். மத நூல்களிலிருந்து சட்ட நூல்கள் வரை இவற்றில் அடங்கும். ராஜன்பாபு 1946-ம் ஆண்டுவரை தமது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார் அது முதல்தாம் ஓய்வுபெற்ற காலம்வரையுள்ள எஞ்சிய வாழ்க்கை வரலாற்றை அவர் எழுதி முடிப்பார்.

அன்பும், நேர்மையும், உண்மையும், சத்தியமும், தியாக வாழ்வும் பூண்ட இப் பெருந்தலைவர்காந்திஜின் அகிஹிம்சா கொள்கைக்கு எடுத்துகாட்டய் விளங்கினார். பீகார் பெற்றெடுத்த ஒப்பற்ற புதல்வனான ராஜன்பாபு பேரறிஞராகவும், பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவராயும், சிறந்த வழக்கறிஞராகவும், சுதந்திரப் போராட்டத்தில் காந்தி மகாத்மாவின் முன்னணி சிஷ்யர்களில் ஒருவராகவும் விளங்கினார். ஆடம்பர மாளிகையை விட்டு ஆசிரம வாழ்க்கையை மேற்கொள்ளவிருக்கும் ராஜன் பாபு சிறிது காலமாகச் சுகவீனமுற்றிருக்கிறார்.

## களனி எம். பி. கிராம கமிட்டித் தேர்தலில் தோல்வியுற்றார்

களனி, திங்கள்

சனிக்கிழமை நடைபெற்ற கிராமக் கமிட்டித் தேர்தலில், களனித் தொகுதியின் பாராளுமன்றஅங்கத்தவரும், களனி கிராமக்கமிட்டியின் தலைவருமான திரு ஆர். எஸ். பெரேரா போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் தோல்வியடைந்துள்ளார்.

விவெல்டுவ — நங்கமுகொட்—டலுகன்கொட என்ற அவரது சொந்தத் தொகுதியில் 36 குறைவான வாக்குகளினாலும், வெடமுல்ல தொகுதியில் 513 வாக்குகளினாலும் தோல்வியடைந்தார்.

## சிம்லாவில் கடும் பனி

புதுடில்லி, ஜன 29

சிம்லாவில் 3 அடி உயரத்திற்கு வெண்பனி கண்டிருக்கிறது. மலைப்பகுதிகளில் 8 அடி உயரத்திற்கு வெண்பனி கண்டுள்ளது.

## உதவி இந்திய தூதருக்கு தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய உதவி ஹைகமிஷனர் திரு. பி. எம். எஸ். மணிக்கு நேற்று மாலை "ஈழநாடு" காரியாலயத்தில் தேநீர் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## இந்தியாவில் சிமிந்தி உற்பத்தி

புதுடில்லி, ஜன. 29

3 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருடம் 180 லட்சம் டன் சிமிந்தி உற்பத்தி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# 23 தொகுதிகளில் நேரடிப் போட்டி

## தேர்தலில் எருதுகள் பிரச்சினை!

தமிழ் நாட்டிலிருந்து மக்கள் சபைக்கு 41 பேர்களும், தமிநாடு சட்டசபைக்கு 206 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனல் அந்த நல்லூர் தொகுதி வாக்கெடுயபு திரு அண்ணமலை முத்துராசாவின் மரணத்தினல் பின் போடப்பட்டுள்ளபடியால் 205 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே தேர்தல் நடைபெறும். இந்த 205 தொகுதிகளில் மொத்தம் 796 பேர்கள் போட்டியிடுகின்றனர், 5 தொகுதிகளில் தலா 8 அபேட்சகர்களும், 3 இடங்களில் தலா 7 பேர்களும, 15 இடங்களில் தலா 6 பேர்களும், 30 இடங்களில் தலா 5 பேர்களும் 60 இடங்களில் தலா 4 பேர்களும், 70 இடங்களில் தலா 3 பேர்களும் போட்டியிடுகிருர்கள். 23 தொகுதிகளில் நேரடிப் போட்டிகள் நடக்கவிருக்கிறது.

திருச்செந்தூரிலிருந்து பார்லிமெண்டுக்கு திரு. டி. டி. கே. வெற்றிபெற்றுவிட்டதால் 40 இடங்களுக்கு போட்டி நடக்கிறது. மொத்தம் 151 பேர்கள் போட்டியி்கிருர்ககள். 15 இடங்களில் மும்முனைப் போட்டியும், 4 தொகுதிகளில் நேரடிப் போட்டியும் நடைபெறுகிறது.

## தேர்தல் எருதுகளும் தபால்தலை எருதுகளும்

காங்கிரஸ தேர்தல் சின்னத்தைப் பொதுமக்களுடையே வலியுறுத்தும் விதத்தில், தபால், தந்தி இலாகா 1955-ல் நான்கு அணு தபால்தலை வெளியிட்டிருக்கிறது என்ற, திரு ராஜகோபாலாச்சாரியின் குற்றச்சாட்டை யூனியன் மந்திரி டாக்டர் சுப்பராயன் மறுத்தார். அந்தத் தபால் தலையை உன்னிப்போடு கவனித்தால், இரண்டு எருதுகள் மட்டுமே அதில் இருப்பது தெரியும் என்றும் விவசாய காரியத்துக்கு எருதுகள் எப்படிப் பயன்படுகின்றன என்பதைக் காட்டவே அவ்வாறு அவை சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன என்றும், அத்துடன் ஐந்தாண்டுத் திட்ட வரிசையில் விவசாய திட்டத்தை முன்னிட்டு அது வெளியிடப்பட்டிருக்கிறதென்று டாக்டர் சுப்பராயன் கூறினர்.

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

தபால் தலையில் காட்டப்பட்டுள்ள எருதுகளுக்கும், காங்கிரஸ தேர்தல் சின்னத்திலுள்ள எருதுகளுக்கும் பெருமளவு வித்தியாசமிருக்கிறதென்றும், கொம்புகளும் ஒரே மாதிரியானவை அல்லவென்றும், தபால் தலையிலுள்ள எருதுகள் ஏரோடு பூட்டப்பட்டிருக்கின்றன என்றும் அவர் சொன்னர். காங்கிரஸ சின்னத்திலுள்ள மாடுகளுக்கு நுகத்தடி மட்டும் பூட்டப்பட்டு இருக்கும்; கலப்பை இராது. காங்கிரஸ தேர்தல் சின்னத்தின் எருதுகளும், தபால் தலையிலுள்ள எருதுகளும் முற்றிலும் மாறுபட்டவை என்றும், தேர்தல் நோக்கத்தோடு அது வெளியிடப்படவில்லை என்றும் அவர் கூறினர். அத்துடன் தபால் தலை வெளியிடப்பட்ட 1955-ம் ஆண்டு, தேர்தல் ஆண்டு அல்லவென்றும் பெங்களூரில் ராஜாஜி பேசிய பேச்சுக்கு விளக்கம் தெரிவித்து அவருக்கே தாம் கடிதம் எழுதியிருப்பதாகவும் டாக்டர் சுப்பராயன் தெரிவித்தார்.

## கட்சிகளும் வானெலி தேர்தல் பிரசாமும்

அரசியல் கட்சிகள் வானெலியில் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு புதிய ஏற்பாடுகளை தேர்தல் கமிஷன் செய்திருப்பதை பி சோ. கட்சி ஏற்றுக் கொண்டதாக அறிவித்துள்ளது. பிரதம தேர்தல் கமிஷனருடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நடத்திய கூட்டத்தில் காங்கிரஸ கட்சி இப்புதுமுறை பற்றிய பிரேரணைகளைச் செய்தது. இதன் பிரகாரம் காங்கிரஸ கட்சி 15 நிமிஷ பேச்சின் மூலம் வானெலி பிரசாரத்தைத் துவக்கி வைக்கும் அகில இந்திய ரீதியில் அங்கீகரிக்மப்பட்டுள்ள மற்ற ஐந்து கட்சிகளுக்கும் முறையே 15 நிமிஷங்கள் பேச்சு இதைத் தொடர்ந்து இருக்கும். கடைசியில் எதிர்க்கட்சிகளுக்கு பதிலளிப்பதற்காக காங்கிரஸ கட்சி 15 நிமிஷப் பேச்சு நிகழ்த்தும். கம்யூனிஸ்ட் கட்சி இதுபற்றி இவ் வாரத்தில் முடிவு செய்யும். ஜனசங்கம் இதை ஆதரிக்கவில்லை. சு. கட்சி, சோஷலிஸட் கட்சிகளின் அபிப்பிராயம் இன்னும் தெரியவில்லை. இதுபற்றிய ஒரு உடன்பாடு ஏற்பட்டால் முதல் தேர்தல் பிரசார வானெலிப் பேச்சு பிப்ரவரி 17-ந் தேதிஅன்று இருக்கும்.

## தமிழ்த் தேசியக்கட்சி - பிரஜா சோஷலிஸ்ட் உடன்பாடு

மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடும் பிரஜா சோஷலிஸட் கட்சி அபேட்சகர் குமாரி எஸ். விஜயலட்சுமியை தமிழ் தேசியக் கட்சி ஆதரிக்கும். பாராளுமன்றத் தொகுதியில் திரு. ஈ. வே. ரா. கி. சம்பத்தை பி. சோ. கட்சி ஆதரிக்கும். இந்தப் பரஸ்பர உடன்பாட்டை உண்டாக்கும் முயற்சியில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானமும் கலந்து கொண்டார் என்று தெரிகிறது தமிழ் தேசியக் கட்சி மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, எழும்பூர் ஆகிய தொகுதிகளில் தான் நிறுத்தியிருந்த அபேட்சகர்களை வாபஸ் பெற்றது

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு தை மாதம் 17-ம் தேதி செவ்வாய்க் கிழமை (30-1-62) பிற்பகல் 2-10 வரை நவமி. பகல் 11-36 வரை விசாகம். பகல் 12-29 வரை மரணயோகம். அதன் பின் சித்தயோகம். கரிநாள். இன்றுஎவ்விதமானபுதுமுயற்சிகளும்கூடாது. தெய்வவழிபாடு உத்தமம். பிறவூர்ப் பிரயாணத்தைச் செய்யக்கூடாது.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்திலே ஜனனமானவர்களுக்கு நற்பலன் நடக்க இடமுண்டே தவிர உத்தமமான பலனுக்கு இது காலமாக இருக்க முடியாது. தெய்வ வழிபாடும் பொறுமையும் அவசியமாகும். தாய்வழி மனத்தாபங்களும் வண்டிவாகனதிகள் பணச்செலவும் இனசன விரோதமும் இவ்வாண்டில் காணப்படும். கஷ்டங்கள் உடனுக்குடன் சமாளிக்கப்படும். இவர்கள் நவக்கிரக தோத்திர பாராயணமும் நவக்கிரக தேவதா பிரதக்ஷண நமஸ்காரங்களும் செய்து வந்தால் தோஷங்கள் நிவர்த்தியாகி சுகம் பெறலாம். பெண்களுக்கு சீரான குடும்பவாழ்வு இவ்வாண்டு கிடைக்க இடமுண்டு. தெய்வ வழிபாடு அத்தியாவசியமாகும்.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: கடன் வரவு, வித்தை விருத்தி.

பரணி: புதுமுயற்சியும் ஏமாற்றமும்,ஆசைபலமின்மை.

கார்த்திகை: தருமசிந்தனை, தொழில் வெற்றி.

ரோகிணி: பொருளழிவு, சிறியோர் தொல்லை.

மிருகசீரிடம்: குடும்ப கஷ்டம், இன்பசிந்தனை.

திருவாதிரை: குடும்பநலம், இனசன உதவி

புனர்பூசம்: தொழில்விருத்தி பணியாளருதவி.

பூசம்: பெண்களால்தொல்லை கஷ்டம்.

ஆயிலியம: கடன்வரவு, சந்தோஷம்.

மகம்: சந்தோஷ வாழ்வு, சுகம்.

பூரம்: கடும் உழைப்பு, ஊழியர் தொல்லை.

உத்தரம்: சந்தோஷம், பணவரவு.

அத்தம்: அலைச்சல், சஞ்சலம்.

சித்திரை: பெரியோர் சேர்க்கை, தொழிற்சித்தி.

சுவாதி: பிரயாணக் கஷ்டம், சஞ்சலம்.

விசாகம்: தொழிற்கேடு,கஷ்டம்.

அனுஷம்: இனசனவிரோதம், அற்பர் தொல்லை.

கேட்டை: வாக்குச் சாதுரியம், நன்மை புகழ்.

மூலம்: அறிஞர் நேசம், கல்வியாராச்சி.

பூராடம: மனமடிவு, பணக் கஷ்டம், பகை.

உத்தராடம்: சமயோசிதமாக சமாளித்தல், நன்மை.

திருவோணம்: பலிதமற்ற உழைப்பு, பணநெருக்கடி.

அவிட்டம்: ஊழியர் உதவி, தொழிற்சித்தி.

சதயம்: தொழிற் தாமதம், கஷ்டம்.

பூரட்டாதி: பெரியோர் நேசம், பிரயாணசுகம்.

உத்தரட்டாதி: முதியோர் பகை, அவசரப்பேச்சு.

ரேவதி: வர்த்தக அபிவிருத்தி, தொழில்நன்மை.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00,இரவு 9-00)

செவ்வாய் 30-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை5-00பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-45 குரல்வகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 வி. குமாரசாமி - நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 வைஷ்ணவ ஜனதோ, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வாழியகாந்தி மகாத்மா-இசை நிகழ்ச்சி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-45 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சர்வோதய தினம் - பேச்சு, 7-45 வேதாரண்யம் ஜி. வேதமூர்த்தி - நாகஸ்வரம, 9-15 'பசி' - நாடகம், 9-30 நாட்டுப்பாடல்கள், 9-50 சென்னை அஞ்சல், 10-00 சென்னை அஞ்சல்.

## உடுப்பிட்டி கிராமசபை உபதலைவர் போட்டியின்றித் தேவுர்

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டி கிராமசபையின் கூட்டம் சென்ற சனிக்கிழமை தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தின் தலைமையில் கூடியபோது முன்பு உபதலைவராக இருந்துவந்த திரு எம். யோகலிங்கம் மீண்டும் உபதலைவராக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இவர் கிளிநொச்சி தமிழ்க் காங்கிரஸ வாலிப முன்னணியின் தலைவர்.


### காணிகள் விற்பனை

ஆனைக்கோட்டையில், போக்குவரத்து பாதையை அடுத்து, வீடு கட்டி குடியிருக்க வசதியான தென்னை, பலா, மா, முதலிய வான் பயிருடன் பத்து பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது. பகுதியாகவும் வாங்கலாம்.

சி. க. நடராஜா,
271, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் ...கிரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரு. 12-50. பல வியாதி ...க்கும் நற்சாட்சிப் பத்திரங் ...டங்கிய கற்றலோக் Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
...சபின் ...யார் கோவிலடி,
...பாணம்

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது'

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்

J. D

# சந்திரனை படம்பிடிக்கும் முயற்சி; அமெரிக்கா தோல்வி

கேப்கனவரோல், ஜன. 29

சந்திரனைப் படம்பிடித்து "டெலிவிஷனில்" காட்டுவதற்காக அமெரிக்க விஞ்ஞானிகள் வானவெளிக்கு அனுப்பய "ரேஞ்சர்3" என்ற வானவெளிக்கப்பலில் பொருந்தப்பட்சில கருவிகள் இயங்காமல்விட்டதால் சந்திரனைப் படம்பிடிக்கும் முயற்சி தோல்வியடைந்துவிட்டது.

மணிக்கு நான்காயிரத்துக்குமதிகமைல் வேகத்தில் வானவெளிக்குப் பிரயாணம் செய்த இந்த வானவெளிக் கப்பல் குறிப்பிட்ட வேகத்துக்குமதிகமாகச் சென்றதால் உரிய பாதையைவிட்டு விலகிச்சென்றதென்றும் ஆனாலும் சந்திரனுக்கு சுமார் 20,000 மைல் தூரத்தில் செல்லக்கூடியதாக விஞ்ஞானிகள் அதன் திசையைத் திருப்பிவிட்டனரென்றும் அறிவிக்கப்பட்டது.

# காஷ்மீர் — பிளாக் முயற்சி வெற்றி தரும்? உடன்பாடு இல்லையேல் நாசம்!

லண்டன், ஜன. 29

ஐக்கிய நாடுகளின் இதர மத்தியஸ்தர்கள் முயற்சி செய்து தோல்வியடைந்த பதினன்கு ஆண்டுகளாக தீராத பிரச்சினையாக இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினைக்கு சமரச முடிவு காண்பதில் உலக வங்கித் தலைவர் திரு. யூஜின் பிளாக் வெற்றிபெறக்கூடும் என்று சுயேச்சைப் பத்திரிகையான ஞாயிறு ஒப்சாவர் கூறியது.

"இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் சென்ற பதினன்கு வருடங்களாக இருந்து வரும் காஷ்மீர் பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்யுமாறு திரு. யூஜின் பிளாக்கை திரு. கென்னடி அழைத்தது இதுவரை செய்திராத ஒரு உருப்படியான திட்டமாகும். திரு. யூஜின் பிளாக் சமரச முயற்சி செய்வதை பாக்கிஸ்தான் வரவேற்றுள்ளது. இந்தியாவும் இதை பின்பற்றுமென்று எதிர்பார்ப்போமாக!" என்று அந்தப் பத்திரிகை கூறுகிறது.

"திரு. பிளாக் சூழ்நிலைகளை நன்கு அறிந்தவர். அவரது சகிப்புத் தன்மையும் சமரசத் தீர்வு காணும் திறமையும், பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் இருந்துவந்த மிகக் கடினமான இந்து நதித் தண்ணீர் பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு கண்டதன் மூலம் முன்னரே வெளிப்பட்டது. அவரது முயற்சி வெற்றியளிக்கக் கூடும்" என்று 'ஒப்சர்வர்' நம்பிக்கை தெரிவிக்கிறது.

பெருந் தொந்தரவு எதுவுமில்லாமல் காஷ்மீர் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து வந்த போதிலும் பயமுறுத்தல்கள் வெடித்துக் கிளம்பாமலிருக்கவும் இரு நாடுகளுக்கிடையில் சந்தேகம் ஏற்படாமலிருக்கவும் இப் பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காண வேண்டியது அவசியமென்றும் 'ஒப்சர்வர்' கூறுகிறது.

இரண்டு நாடுகளும் ஒரு உடன்பாட்டுக்கு வரவில்லையானல் எந்தச் சமயமும் ஒரு நாட்டுக்கோ அல்லது இரு நாடுகளுக்குமோ நாசத்தை விளைக்கக் கூடிய ஒரு நிலையை வளர்த்து வருவதாக இருக்கும் என்று அப்பத்திரிகை கூறுகிறது.

## கொச்சியில் பீல்ட்மார்ஷல் அமெர்

எர்னுக்குளம், ஜன,29

இப்பொழுது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசின் உதவி ஜனதிபதி பீல்ட்மார்ஷல் அமெர் எர்ணக்குழத்துக்கு விஜயம் செய்து கொச்சியிலுள்ள பாரத கடற்படைத் தளத்தை பார்வையிட்டார். கடற்படையின் விமானப்படைப்பிரிவையும் பார்வையிட்ட அவர் கடற்படையினர் அளித்த இராணுவ மரியாதையையும் ஏற்றார்.

## அங்கோலாவில் ஐ. நா. விமானம்

### போர்ச்சுக்கீஸியர் தடுத்து வைத்துள்ளனர்

லண்டன், ஜன. 29

அங்கோலாவில் லுவாண்டா என்ற இடத்தில் நிர்ப்பந்தமாகத் தரையிறங்கவேண்டியேற்பட்ட ஐ. நா. போக்குவரத்து விமானத்தை போர்ச்சுக்கீஸிய துருப்பினர் தடைப்படுத்தி காவல் செய்து வருகின்றனர்.

சென்ற வெள்ளிக்கிழமை காங்கோவிலுள்ள ஐ. நா. சிப்பந்திகளுக்கு உடைகள் ஏற்றிக்கொண்டு வந்த இந்த விமானம் மூடுபனி காரணமாகவும் பெட்ரோல் முடிவடைந்துவிட்டதாலும் லுவண்டாவில் கட்டாயமாகத் தரையிறங்க வேண்டிநேரிட்டது. இந்த விமானத்தில்பாரதம், கனடா, மலாயா, காங்கே ஆகிய நாடுளைச் சேர்ந்த 13 சிப்பந்திகளிருந்தனர்.

## கடன்பட்டு கலங்குவோர்

### பர்மா அரசாங்கம் மீட்சியளிக்கும்

ரங்கூன், ஜன. 29

அநியாய வட்டி வாங்கும் லேவாதேவிக்காரரிடம் கடன் வாங்கிவிட்டு மீள முடியாமல் அல்லல் படும் விவசாயிகள், சிறு வர்த்தகர்கள், அங்காடி வியாபாரிகள், அரசாங்க சிப்பந்திகள் ஆகியோருக்கு துணை செய்யும் மசோதாவொன்று அடுத்தமாதம் கொண்டுவரப் படவிருப்பதாக பர்மாப் பிரதமர் யு. நூ. தெரிவித்துள்ளார்.

## கல்கத்தாவில் டென்மார்க் பிரதமர்

கல்கத்தா, ஜன. 29

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள டென்மார்க் பிரதம மந்திரியும் அவரது மனைவியும் இன்று கல்கத்தா வந்து சேர்ந்தனர். டம் டம் விமானநிலையத்தில் அவர்களை மேற்கு வங்காள பொலிஸ் மந்திரியும் மற்றும் உயர் அதிகாரிகளும் வரவேற்றனர். இன்று அவர்கள் கவியரசர் தாகூரின் இல்லத்துக்கு விஜயம் செய்வர்.

# 'இந்துக்கள் குடியேறுவதை ஆஸ்திரேலியா தடுக்கவேண்டும்'

## பொருளாதார நிபுணர் கருத்து

கான்பரா, ஜன. 28

ஆஸ்திரேலியாவில் இந்துக்கள் குடியேறுவதைத் தடை செய்யவேண்டுமென்றும் ஆங்கிலம் பேசும் ஜப்பானியர்கள் குடியேறுவதை ஆதரிக்க வேண்டுமென்றும் ஆஸ்திரேலியரான திரு. கொலின் கிளார்க் நேற்றுக் கூறினர்.

ஒக்ஸ் போர்ட் ஸ்தாபனத்தில விவசாய பொருளாதாரப் பிரிவில் பொருளாதார நிபுணரான திரு. கொலின் கிளார்க் இந்துக்கள் சிறந்த குடியேற்றக்காரர்களாக இருக்க மாட்டார்களென்றும் இதற்குக் காரணம் கலப்பு மணத்துக்கு அவர்களுடைய மதம் தடையாக இருப்பது தானென்றர்.

"உலக சமாதானத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய ஏதேச் சாதிகார ஆக்கிரமிப்பு அரசாக இந்தியா விளங்குகிறது" என்று திரு. கிளார்க் கூறினர்.

"இந்தியர்கள் வெளிநாடுகளில் குடியேறுவது இந்திய ஆக்கிரமிப்புக்கு ஒரு படியாக இருக்கும். மோரிஷஸிலும் ஆபிரிக்காவிலும் இதை நாங்கள் விரைவில் எதிர்பார்க்கலாம்" என்று திரு. கிளார்க் கூறுனர்.

கணிசமான அளவு கல்வி கற்ற, ஆங்கிலம் பேசும் ஜப்பானிய இளைஞர்கள் குடியேறுவதற்கு விரும்பினல் அவர்களை வரவேற்கவேண்டும் என்றும் திரு. கிளார்க் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் தொழில் வளத்தைப் பெருக்க ஜப்பானியர்கள் உதவி புரிவார்களென்றும் அமெரிக்கா கனடா, ஹாவாஸ் ஆகிய இடங்களில் ஜப்பானியர்கள் குடியேறி கலப்பு மணம் செய்துகொண்டதுடன் அவர்கள் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் வாழ்கிருர்களென்றும் திரு. கிளார்க் கூறினர்

## பாதுகாப்புச் சபையில் காங்கோ விவாதத்திற்கு பிரதமர் அடெளலா எதிர்ப்பு

நியுயோர்க், ஜன, 29

காங்கோ நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா பாதுகாப்புசபை நாளை செவ்வாய்க்கிழமை கூடவிருக்கிறது. சோவியத் யூனியனின் கோரிக்கை மீது கூடவிருக்கும் இக்கூட்டத்துக்கு காங்கோ பிரதமர் திரு. அடெளலா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

காங்கோ நிலைமை பற்றி பாதுகாப்புசபை இச் சமயத்தில் விவாதிப்பது மேலும் குழப்ப நிலைமையைத்தான் உண்டாக்கும் என்று திரு. அடெளலா தெரிவித்தார்.

லாகோஸில் நடைபெறும் ஆபிரிக்க பெருந் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் காங்கோ பிரதமர் அடெளலா, பாதுகாப்புச்சபை காங்கோ பற்றி இச் சமயத்தில் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை யென்பதற்கு விளக்கம் தெரிவித்து எதிர்ப்பதற்காக நியுயோர்க் செல்ல விருப்பதாகத் தெரிவித்தார்.

காங்கோவில் நிலைமை இப்பொழுது பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்த திரு. அடெளலா காங்கோவிலுள்ள ஆறுமாகாணங்களில் ஐந்து மாகாணங்களும் கடாங்காவின் வடக்குப் பகுதியும் காங்கோ மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

கடாங்காவிலுள்ள அந்நிய கூலிப் பட்டாளத்தினரை வெளியேற்றுவதற்கு ஷோம்பே உறுதியளித்திருப்பதாகவும் திரு. அடெளலா தெரிவித்தார்.

### கிஸங்கா சிறையிலில்லை

காங்கோவின் முன்னள் உதவிப் பிரதமர் திரு. கிஸங்கா பற்றி காங்கோ பிரதமர் பின்வருமாறு கூறினர்:-

கிஸங்கா கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிருர் என்று யாரும் கருத வேண்டியதில்லை. அவர் மீது எவ்வித குற்றச் சாட்டுக்களும் இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை. கிஸங்காவுக்கு எதிராக பகைமைச் சூழ்நிலை ஒன்று உருவாக்கி வந்த காரணத்தினல் அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கிஸங்கா இப்பொழுது லியப்போல்ட் வில்லிக்கு அருகில் பாரசூட் துருப்பினர் முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## செல்வர்களின் ஆதரவு எழுத்தாளர்களுக்கு வேண்டும்

குரும்பசிட்டி, திங்கள்

'பணம்படைந்த செல்வர்களின் ஆதரவு எழுத்தாளர்களுக்குக் கிடைக்குமாயின் எழுத்தாளர்கள் மேலும் புதிய உற்சாகத்துடன் உழைக்க ஏதுவாகும்' என குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நடைபெற்ற "மத்தாப்பு" வெளியீட்டின் போது அதன் பதிப்பாசிரியர் திரு. கனக செந்திநாதன் குறிப்பிட்டார்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களாகிய இ. நாகராஜன், கனக. செந்திநாதன், 'சு. வே.' 'குறமகள்' எஸ். பொன்னுத்துரை என்பவர்களால் எழுதப்பெற்ற மத்தாப்பின் வெளியீட்டு விழாவில் ஏராளமான எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர். நடேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. ஆ. மார்க்கண்டன் தலைமைவகித்துக் குறுநாவலையும் எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்துவைத்தார். திருவாளர்கள் இளங்கீரன், தேவன் டெமினிக் ஜீவா, க. பெ.முத்தையா, சி செல்லத்துரை, ஏ. டி. பொன்னுத்துரை ஆகியோரும் ஈழத்து எழுத்தாளர்களின் முயற்சிகளையும் அவர்களின் படைப்புக்களையும் பாராட்டினர்.

## விவசாயசங்கம்—மாதர் சங்கம் இணைப்பு

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி மேற்கு இளம் விவசாய சங்கமும், கரவெட்டி மேற்கு இளம் மாதர் சங்கமும் ஒரே குறிக்கோள்களை முன்வைத்து ஒத்துழைப்பதாகத் தீர்மானித்தனர்.

இவ்வருடம் விவசாயிகள்சங்கம் கோழிப்பண்ணைகளின் தொகையை அதிகரிக்கவும், யப்பானிய முறைப்படி நெற்பயிர் செய்யவும், பெருவாரியாக மரங்களை நாட்டி மண்ணைப் பாதுகாக்கவும் திட்டம் வகுத்துள்ளது. கரவெட்டி மேற்கு இளம் மாதர் சங்கம் கோழிப்பண்ணை அபிவிருத்தியில் விவசாயிகள்சங்கத்துடன் ஒத்துழைப்பதோடு, தங்கள் நெசவுத்தொழிலால்வரும்மேலதிக இலாபத்தை கோழிகள் வாங்குவதிலும், பண்ணைகள் கட்டுவதிலும் செலவிடுதாகத் தீர்மானித்துள்ளனர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் திரு. எஸ்.விக்னேஸ்வரன். காரியதரிசி திரு குமாரசுப்பிரமணியம், தனதிகாரி திரு. எஸ். ஏ. துரைராசா.

## சூடானில் 12 பேர் விடுதலை

லண்டன், ஜன. 29

சூடானில் சென்ற வருடம் ஜூலை மாதத்தில் கைது செய்து ராணுவக் காவலில் வைக்கப்பட்ட 12 அரசியல் தலைவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் முன்னள் பிரதமர்கள்.

## குடியரசு விழாவில் ரூ. 3 லட்சம் வசூல்

புதுடில்லி, ஜன. 29

புதுடில்லியில் நடைபெற்ற இந்திய குடியரசு தின விழாக் கொண்டாட்டத்தை யொட்டி நடைபெற்ற நாட்டு நடனம் முதலிய வைபவங்களில் டிக்கட் கட்டணங்களின் மூலம் 3 லட்சத்து 65000 ரூபாய் வசூலானது இதில் 2 லட்சதது 52,000 ரூபாய் பிரதம மந்திரியின் தேசிய நிதிக்கு வழங்கப்பட்டது. மிகுதி ஒரு லட்சத்து 13,000 ரூபாயும் நாட்டு நடனங்களின் அபிவிருத்திக்காகச் செலவிடப்படும்.

## கப்பல் பிளந்தது

ஹாங்காங், ஜன.29

தென் சீனக்கடலில் சென்ற வெள்ளிக்கிழமை புயலில் சிக்கி இரண்டாகப் பிளந்த கிரேக்க எண்ணெய்க் கப்பலிலிருந்த 60 மாலுமிகளில் இரண்டு இந்திய மாலுமிகளைத்தவிர மற்றவர்களெல்லோரும் காப்பாற்றப் பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

எண்ணெய்க் கப்பலின் இரண்டு பாகங்களும் ஒன்றுக்கொன்று 15 மைல் தூரத்தில் மிதந்துகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மணி வாக்கு

"அறவாழ்வின் அளவுகோல் விசேஷ முயற்சிகள் அல்ல; தினசரி வாழ்க்கையே யாகும்"


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 17௳ (30 - 1 - 62)


## சதித் திட்டம்

திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு இராணுவ அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் திட்டமிட்டதாகப் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ள துசதித்திட்டம், நேரகாலத்துடன் முறியடிக்கப்பட்டுள்ளது. இதனையிட்டு அரசாங்கம் உண்மையாகவே பெருமையடையலாம்.

இலங்கையில் இன்றுடன் 288 நாட்களாக அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்து வருகின்றது. நோயைக் குணப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட அருமருந்தே யமனை வந்தது போல, நாட்டின் பாதுகாப்புக்கென ஏற்படுத்தப்பட்ட இராணுவத்தினர் அரசாங்கத்தை வீழ்த்தி, அதிகாரத்தைக்கைப் பற்றத் திட்டம் வகுத்துள்ளதாயின், திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் எவ்வளவு தூரம் எச்சரிக்கையாக இருகக வேண்டுமென்பதையே இந்தச் சதிச் செயல் அனைவருக்கும் உணர்த்திவைக்கின்றது.

மந்திரிகளையும், அரசியல் தலைவர்களையும் கைது செய்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு உயர்தர இராணுவ, பொலிஸ் அதிகாரிகளும் சதித் திட்டம் வகுத்திருந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விசாரணையின் பின்னர், சதிக்கு உடைந்தையாய் உள்ளவர்கள் எனக் கருதப்படுபவர்கள் அவசரகாலச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உலக நாடுகள் பல இத்தகைய சதித் திட்டங்களுக்குள்ளாகியிருக்கின்றன. பாகிஸ்தானும் இதற்கு விதிவிலக்காய் இருக்கவில்லை.

இலங்கையில் இன்று இந்நிலை ஏற்படுவதற்கான காரணங்களை அரசாங்கம் ஆராய்ந்து, நாட்டை இந்த ஆபத்தினின்றும் காப்பாற்றவேண்டும். அவசரகாலச் சட்டத்தை இராணுவத்தினர் தமக்குச் சாதகமாக்க முனைந்தபோதிலும் அவர்கள போட்ட சதித் திட்டம் நசுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் செயல் திறனுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாயிருப்பினும் ஜனநாயக ஆட்சி ஆபத்துக்குள்ளாகியிருப்பதை எம்மால் இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. நிலைமை இப்போது கட்டுப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பது பொது மக்களுக்குத் திருப்தியளிக்கின்றது.

இலங்கையில் இத்திய சக்திகள் ஏற்படுவதற்கான மூலகாரணத்தை அரசாங்கம் ஆராய்வது அவசியமாகின்றது.

## ஒழுக்கமும் ஜனநாயகமும்

நாட்டில் ஒழுங்கீனங்கள் இன்று மிக வேகமாகப் பரவி வருகின்றதென கொழும்பிலுள்ள ஒரு கல்லூரியின் அதிபர் கூறியிருப்பதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். வீடுகளிலும், பள்ளிக்கூடங்களிலும், பலகலைக் கழகங்களிலும் காரியாலயங்களிலும் ஒழுங்கீனம் தாண்டவமாடுகின்றதென அவர் கவலைப்படுகின்றார். அக்கல்லூரி அதிபர் குறிப்பிட்டிருப்பது போல ஜனநாயகத்தை முறையாகப் பாதுகாக்க வேண்டுமானால் நல்லொழுக்கமும் அருள் நெறியும் நாட்டில் நன்கு பரவுதல் வேண்டும். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. அதே போன்று வீடுகளிலும் பெற்றோர் சண்டை சச்சரவின்றி ஒழுக்கமான வாழ்க்கையை நடாத்த வேண்டியவர்களாகின்றனர்.

நாட்டின் ஒழுக்கம் வளர்ச்சியுறுமாயின், ஜனநாயகமும் அதற்குரிய சிறப்பைப்பெற்று நாட்டின் அமைதிக்கு வழிவகுக்கும்.

---

இன்று, அஹிம்சா மூர்த்திஅண்ணல் காந்திஜி உயிர் நீத்த தினம். 1948-ம் ஆண்டுஜன. 30 மாலை சரியாக5-மணி 05 நிமிடத்தில் அண்ணல் காந்திஜி கொலைகாரன் ஒருவனின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார். இன்று பாரதநாடு முழுவதிலும் உலகின் பல பாகங்களிலும் காந்திஜியின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது

# ஏதமில் காந்திஜி எங்களுயர் அண்ணலன்றே!

(மு. க. சூரியன்)

### வெண்பா

பாரதஞ்சூழ் மல்கிருள்கொல் பானுவாய் வந்தவுயர்
விரஞ்சேர் வீங்குபுகழ் வித்தகனும்—சீரண்ணல்
புறத்தியா னாட்சிப் பூண்டைவே ரோடகற்றப்
பிறந்தமர னனே பின்பு

### ஆசிரிய விருத்தம்

பாரதஞ் சேருமுயர் பம்பாயி லோங்குபோர்
பந்தரி லுதித்த அண்ல்;
பகருமுயர் மாபெரும் பார்புகழு சீமையிற்
பயின்றமா காந்தி அண்ணல்;
தூரணம தாகவடி மைத்தளை களைந்து நிறை
துன்புதவிர் வித்த அண்ணல்;
தூய்மையொடு கற்றபின் தூயதாய் நாட்டினிற்
றுரிதபணி செய்த அண்ணல்;
பாரணம் பண்ணுது பல்குபல நாட்களாய்ப்
பட்டினி கிடந்த அண்ணல்;
பார்புகழு கஸ்தூரி பாயெனுந லரிவையைப்
பண்பொடு வரித்த அண்ணல்;
காரணங் காட்டியே கடினவா தஞ்செய்து
கனவழக் குரைத்த அண்ணல்;
கம்பரங் கொண்டுதென் னபிரிக் காவணுகிக்
கனபணிசெய் அண்ணலன்றோ!

தன்னலங் கருதாது தாய்நாட்டி லுறைமக்கள்
தக்கபய னுற்று வாழத்
தாரணியி லன்புஹிம் சையுண்மை யிவைகளாந்
தகுபடைகள் கொண்ட அண்ணல்
அன்னியரி னாட்சிதனை யடியோ டகற்றியிகழ்
அடிமையென் தளையை வெட்ட
அரியசத் யாக்கிரக மவனிதிகி லெய்தவே
அஹிம்சையொடு செய்த அண்ணல்;
துன்னிவள ருங்கொடிய தீண்டாமைப் பேயினைத்
துரத்தி வெகு வெற்றி காணத்
துன்பமுற் றுளநொந்து துயர்கொண்ட ஹரிஜனர்த்
தொண்டினைச் செய்த அண்ணல்;
இன்னல்தரு பகைவரை இனியநல் லன்பினல்
இதமுடைய நண்ப ராக்கி
இப்பெரிய வுலகமே யேத்தியேத் திப்புகழ
இசைகொண்ட அண்ணலன்றோ!

உண்மைமொழி யன்றியிழி பொய்யுரைக ளுரையாத
உயர்வுகொளு பண்பு மிக்கு
ஊறுதரு மதுபானம் மாமிசம் உண்ணுத
உசிதகுண சீல னண்ணல்;
ஒண்மைமிகு சுதந்திரநல் வித்ததனை நாட்டியே
ஓங்கிவரு விளைவு கொள்ள

ஓதரிய பல்தடவை சிறைவாசஞ் செய்துமே
உளஞ்சலிக் காத அண்ணல்;
திண்மைநிறை வெள்ளையர்கள் திக்குமுக்காடவே
திக்கெலாம் புகழு மோங்கத்
திறனுெடு சுதந்திரஞ் சிறப்போடு நனிபெற்ற
தீரனுங் காந்தி அண்ணல்;
எண்மையாய் வாழ்வுகொண் டேதிலா ரன்புகொள
"இந்தியத் தந்தை" யென்ன
எண்ணரிய புகழ்கொண்ட ஏதமில் காந்திஜி
எங்களுயர் அண்ண லன்றோ!

---

# கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் தூதுகோஷ்டி வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, திங்கள்

கருவாடு இறக்குமதி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்த இந்தியா, பாரசீகக் குடாநாடுகள் செல்லவிருந்த கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்தின் தூது கோஷ்டியை அந்நாடுகளுக்குச் செல்ல விடாது அரசாங்கம் தடுத்துள்ளது.

கூ. மொ. வி. தாபன டைரக்டர்கள் திரு. டி. டபிள்யு. எஸ். ராஜபக்ஸே, திரு. எச். எம். நவரத்ன ஆகியோரும், கூ. மொ. வி. தாபனத்தின் பொது மனேஜர் திரு. எஸ். பி. சேனநாயக்காவும் இந்தத் தூதுகோஷ்டி அங்கத்தவராவர். குறிக்கப்பட்ட நாடுகளுக்கு இவர்கள் சென்று வர்த்தக ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடவிருந்தனர். அவர்களை அங்கு செல்லாது தடுக்கும் உத்தரவொன்றைப் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிறப்பித்துள்ளார்.

வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்னவுடன் பிரதமர் நடாத்திய பேச்சு வார்த்தையொன்றின்பின்னர், பிரஸ்தாப தூது கோஷ்டி தற்சமயம் கருவாடு வர்த்தக சம்பந்தமாக வெளிநாடு செல்ல வேண்டியதில்லை எனப் பிரதமர் கூறியுள்ளாளாராம். பிரதமரின் தீர்மானத்தை வர்த்தக அமைச்சு கூ. மொ. வி. தாபனத்துக்கு அனுப்பிவைத்த அறிக்கையென்று கூறுகிறது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## மகோதய புண்ணிய காலம்

ஏறக்குறைய 30 வருடத்திற்கு ஒருமுறை தோன்றும் இம் மகோதயம், முன்னர் சாதாரண வருஷம் தைமாதம் 17-ந் திகதி திங்கட்கிழமையும், ஈஸ்வர வருஷம் தைமாதம் 18ந் திகதியும் நிகழ்ந்திருக்கிறது. இவ்வாண்டு தைமாதம் 23-ந் திகதி நிகழவிருக்கின்றது. இத் திங்கட்கிழமையின் சூரியோதய காலமே, மகோதய வேளையாகக் கருதப்படுகிறது.

### மகோதய புண்ணியகாலமாவது

"மகரமாமதியிற் சோமவார
மோட மையி னேணம்
நிகரிலா வியதீபாத நேர்படு
மகோதயத்தில்
தகரமார் குழலினனே தகும்
புனலாடிற் பாரிற்
பகரொணா நதிகள் யாவும்
படிந்த பேறடையலாமே."

என்னும் சோதிட நூற் செய்யுட்படி தைமாதமும், திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திரமும் வியதீபாதயோகமுமாகிய இவை சூரியோதய நேரத்தில் ஒன்றுபடத் தோன்றின். அவ்வேளையே பூரணமான மகோதய புண்ணியகாலமாகும். முன் வந்த மகோதயங்களில் வியதீபாத யோகம் சேராமையால் அவை கிஞ்சிந்நியூனம மகோதயமாகவே தோன்றின. இவ்வாண்டு நிகழவிருக்கும் மகோதயம் பலவும் பொருந்தி, சம்பூரணமான மகோதய புண்ணிய காலமாகச் சம்பவிக்கின்றது. இப்புண்ணியவேளையில் ஒரு தருமஞ் செய்யின் அது கோடி தருமஞ் செய்த பலனைக் கொடுக்குமென்று அநேக சாஸ்திரங்கள் இயம்புகின்றன.

இதுவன்றியும் [illegible] அந்நாள் இன்னோர் முக்கிய புண்ணிய காலமாகவும் அமைகின்றது. அஷ்டகிரகங்களும் ஒன்றாகக் குழுமியிருக்குந் தருணமும் ஓர் சிறந்த வேளையாகும். எனவே இவ்விரண்டு காலங்களும் பொருந்தும் இப்புண்ணிய வேளை வழிபாடுகளுக்கேற்றது. அன்றைய நாளில் தீர்த்தஸ்நானம், தானதர்மம், ஆலய வழிபாடு இவைகளைச் செய்தல் அவசியமானது. தனுஷ்கோடி முதலிய தீர்த்தத்திலும் நம் ஈழநாட்டின் கீரிமலை, திருவடிநிலை, வில்லூன்றி, மாணிக்க கங்கை, மகாவலிகங்கையிலும், சங்கம தீர்த்தங்களிலும் இன்னும் அவ்வவ்வாலயங்களிலுள்ள தீர்த்தங்களிலும் சூரியோதயத்தில் ஸ்நானம் செய்தல் தக்கது. இந்நாளில் பிதிர் சிரார்த்தம், திலதர்ப்பணம், குறை பழிபாடு, தானதர்மங்கள் முதலியதற்றைச் செய்தால் அளவற்ற நன்மை பயக்கும். எனவே இவற்றைச் செய்து நாமனைவரும் இப் புண்ணிய வேளையில் ஒன்றுக்குக் கோடி பலனைப் பெற்றுய்வோமாக.

இ. ஞானசேகரக்குருக்கள்
யாழ்ப்பாணம்

## வீடு சரிந்ததால் மூவர் மரணம்

கல்முனை, திங்கள்

கல்முனை இரண்டாம் குறிச்சியிலுள்ள வீடு ஒன்று சரிந்ததால் மூவர் மரணமாயினர். டி. சீனடிப்பிள்ளை வயது (85) எஸ். காளிப்பிள்ளை (வயது 60) எஸ் கனகலட்சுமி வயது (17) ஆகிய மூவருமே வீட்டுக்குள் அகப்பட்டு மரணமானவர்கள்.

# ஊரெழு கொலைவழக்கில் மூன்றும் எதிரி விடுதலை

## 1ம், 2ம் எதிரிகள் சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், செய்வாய்

ஊரெழு கொலைவழக்கில் மூன்றும் எதிரியான செல்வி செல்லையா சரஸ்வதி நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டனால் விடுதலை செய்யப்பட்டார். முதலாம், இரண்டாம், எதிரிகள் சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டனர்.

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்ததாகவும் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்து வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டி ஊரெழுவைச் சேர்ந்த ஓய்வுபெற்றமராமத்து ஓவசியர் கே. செல்லையாவின் பணியாள் சுப்பையா மாடாசாமி, முத்து முத்துச்சாமி என்னும் கார் சாரதி திரு. செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர் மீது இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 237 கள்ளக் கூப்பன்களை வைத்திருந்தாராம்

மன்னார், திங்கள்

பெரிய புள்ளாச்சி பொற்கேணி வாசியான எம். எம். முத்தாலிப்பு என்பவர் 237 அரிசிச் கூப்பன்களை சட்ட விரோதமாக வைத்திருந்தார் என குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மன்னார் நீதிபதி திரு. எஸ். என். இராசதுரை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி, முத்தாலிப்புவை குற்றவாளியாகக் கண்டு 3 வருட நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறும் முடிக்குரிய செலவாக ரூபா 100 செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

# 'ஆயுள்வேத மருந்துகளுக்கு புதிய ரெண்டர்கள் கோரப்படவேண்டும்'

## மாநகரசபைக்கு வரவிருக்கும் பிரேரணை

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சித்த ஆயுள்வேத மருந்துக்கென 1962-ம் ஆண்டு கோரிய ரெண்டரை உடனடியாக ரத்துச் செய்து புதிதாக ரெண்டர்கள் கோரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்றை அடுத்த கூட்டத்தில் திரு. டி. என். செல்லத்துரை கொண்டு வருவார். அதற்கான முன்னறிவித்தல் செய்யப்பட்டுள்ளன.

அப்பிரேரணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

1962-ம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகரசபையின் வைத்தியசாலைக்கு சித்த ஆயுள்வேத மருந்துகளுக்கான கேள்விப் பத்திரத் தகுதியும் அனுபவமும் இல்லாத மாணவராகப் பயின்று கொண்டிருக்கும் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பொது நலனில் அக்கறை உள்ள பொதுமக்கள் எவரும் விரும்பாத ஒரு விடயமாக இருப்பதாலும்,

மாநகரசபையின் சித்த ஆயுள்வேத வைத்தியசாலையால் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் இம்மருந்து வகைகள் தகுதியும் அனுபவமும் இல்லாத ஒரு மாணவரிடம் இருந்து பெறப்படுவதால், பொது மக்களுடைய உயிருக்கே "மாநகரசபை மருந்து விநியோகம்" உலை வைத்து விடுமோ என்ற ஆபத்தான நிலை ஏற்படலாம் என்று சந்தேகிக்கக்கூடியதாக உள்ளதாலும்,

மாநகரசபையின் சித்த ஆயுள்வேத மருந்துகளுக்கென 1962-ம் ஆண்டு கோரிய ரென்டரை பொது மக்களுடைய நலனையும், மாநகரசபையின் கௌரவத்தையும் முன்னிட்டு உடனடியாக ரத்து செய்து புதிதாக சித்தாயுள்வேத மருந்துகளுக்கென மருந்துகள் ரென்டர் கோர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## விசாரணைச்சபை நிறுவ ஆலோசனை

கொழும்பு, திங்கள்

ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு எதிராக பொதுமக்கள் செய்யும் புகார்கள் பற்றி விசாரணை செய்வதற்கென ஒரு சபையை ஏற்படுத்துவதற்கு ஸ்தலஸ்தாபன வீடமைப்பு இலாகா ஆலோசனை செய்துவருகிறது.

ஸ்தலஸ்தாபன அமைச்சு இந்த ஆலோசனை பற்றி அட்டோர்னி ஜெனரலுக்குப் பிரஸ்தாபித்துள்ளது.

ஸ்தலஸ்தாபனசபைக்கு எதிரான மகஜர்களை விசாரணை செய்வதற்கான சபை ஸ்தலஸ்தாபனங்களில் காணப்படும் லஞ்ச ஊழல்கள் பற்றியும் விசாரணைசெய்யும்.

## சேர். லெஸ்லி முன்றோ இலங்கை வந்துள்ளார்

கொழும்பு, திங்கள்

சர்வதேச 'ஜூரிஸ்ட் கமிஷனின் பொதுக்காரியதரிசியான சேர். லெஸ்லி முன்றோவும் அவரது பாரியாரும் இலங்கை வந்துசேர்ந்துள்ளார்கள். நீதியரசர் டி. எஸ். பெர்னாண்டோ கியூ. ஸி., திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன கியூ.ஸி., திரு. எல். ஜி. வீரமந்திரி, திரு. சிறிமேவன் அமரசிங்கா, திரு. எம். சண்முகநாதன் ஆகியோர் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

சேர் லெஸ்லி முன்றோ இலங்கையில் மூன்று நாட்கள் தங்கி நிற்பார். சேர் லெஸ்லி, ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசியாகவும், 'டிறஸ்டீஷில்' சபையின் தலைவராகவும் முன்னுள் கடமையாற்றியுள்ளார். அமெரிக்காவுக்கு நியூசிலாந்தின் ஸ்தானிகராகவும் சேர் லெஸ்லி சிலகாலம் கடமையாற்றினர்.

இலங்கைப் பல்கலைக்கழகம் சட்டக்கல்லூரிக்குச் சென்று மாணவர்களைலெஸ்லி தம்பதிகள் சந்திப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## திருமதி கென்னடியின் இந்திய விஜயம்

### ஓரளவில் உத்தியோகபூர்வமானது

வாஷிங்டன், ஜன 28

ஜனாதிபதியின் பாரியார் திருமதி கென்னடியின் இந்திய-பாகிஸ்தன் விஜயம் தனிப்பட்டமுறையில் அல்லாது ஓரளவில் உத்தியோகபூர்வமானதாக மாற்றப்பட்டுள்ளதென வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் திருமதி கென்னடியின் விஜயத்தில் மிகவும் அக்கறைகொண்டிருப்பதால், இது இம்முறையில்மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகை காரியதரிசி திரு. பியரி ஸலிங்கர் தெரிவித்தார்.

திருமதி கென்னடியின் சுற்றுப்பிரயாண ஏற்பாடுகள் யாவும் தயாராகிவருகின்றன.

## இருவருக்கு அழைப்பு

கொழும்பு, திங்கள்

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம், கல்வி முறைத்திட்டம் ஒன்று பற்றி ஆலோசனை செய்வதற்குப் புது டில்லியில் ஒரு மகாநாடு கூட்டவிருக்கிறது. இந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு 18 நாடுகளை 'யுனெஸ்கோ' அழைத்துள்ளது. இவற்றுள் இலங்கையும் ஒன்ருகும். உதவி வித்தியாதிபதிகளாக திரு, பி. ஜெ. மி. அலெஸ் என்பவரும் திரு. டி. எம். ஹெட்டி ஆராய்ச்சி என்பவரும் இலங்கைப் பிரதிநிதிகளாக டில்லிமகாநாட்டில் கலந்துகொள்வர். இலங்கையிலிருந்து செல்லும் இரு உதவி வித்தியாதிபதிகளுக்கான செலவுகளின் பொறுப்பை 'யுனெஸ்கோ' ஏற்றுக் கொள்ளுமெனத் தெரிகிறது.

# பாடசாலை முன்னேற்றத்துக்கு பெற்ரேர் ஆசிரியர் இணைப்பு அவசியம்

## அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் பேச்சு

அச்சுவேலி, திங்கள்

"பிள்ளைகளின் வளர்ச்சிக்கு பெற்ரேரின் பாடசாலைத் தொடர்பு மிகவும் அவசியமானது. பிள்ளைகளின் நலன் ஆசிரியர்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. பெற்ரேருக்கும் பெரும் பங்கு உண்டு. இரு சார்பினருக்கும் இணைப்பை ஏற்படுத்திப் பாடசாலையின் முன்னேற்றத்தில் இப்படியான சங்கங்கள் அதிகம் பணிபுரிய வேண்டும்."

இவ்வாறு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பெற்ரேர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய தலைமையாசிரியர் திரு சி. மயில்வாகனம் குறிப்பிட்டார்.

இப்பாடசாலை பெற்ரேர் ஆசிரியர் சங்கக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக் கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு மயில்வாகனம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பாடசாலையின் வளர்ச்சியில் பெற்ரேர் அதிக கவனம் செலுத்தவேண்டும். பாடசாலை நலனில் பெற்ரேர், ஆசிரியர் செய்யும் கடமையைப் பொறுத்தே பிள்ளைகளினதும் பாடசாலையினதும் முன்னேற்றம் தங்கியிருக்கிறது.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின்போது தலைவராக திரு. சி. மயில்வாகனமும், உபதலைவர்களாக திருவாளர்கள் இ. வே இராமசாமி, சி. முத்துச்சாமி, மு. இராசா ஆகியோரும் காரியதரிசியாக திரு. ஆ. குமரகுருவும், உபகாரியதரிசியாக திரு. சி. செல்லத்துரையும், தனதிகாரியாக திரு. ஏ. சோமசுந்தரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

கௌரவ போஷகராக ஸ்ரீலஸ்ரீ எஸ். குமாரசாமிக்குருக்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

நடைமுறை உபவிதியமைப்பதற்கான உபசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# பெரியம்மை பரவாது தடுக்க துரித நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

மட்டக்குளியாவில் வசித்து வந்த ஒருவர் பெரியம்மை நோயினல் மரணமானர் என மரண விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

கொழும்புவடக்கிலும் தெமட்டக்கொடையிலும் பெரியம்மை தடுப்பு பால்கட்டும் நிலையங்கள் பன்னிரண்டைத் திறந்து வைப்பதற்கு நகரசபை சுகாதாரப்பகுதி அதிகாரிகள் ஒழுங்குகளைச் செய்துவருகின்றனர். மட்டக்குளியாப் பகுதியிலுள்ள வீடுகள் தோறும் சென்றும் நகரசபைச் சுகாதாரப் பகுதியினர் பால்கட்டும் வேலைகளிலீடுபட்டு வருகின்றனர் எனத் தெரிகிறது. வெல்லம்பிட்டி, மட்டக்குளியாப் பகுதிகளிலுள்ள அரசாங்க காரியாலயங்களிலும் ஏனைய வேலைத்தலங்களிலுமுள்ள அனைவரையும் பெரியம்மை தடுப்புப் பால் கட்டிக்கொள்ளும்படி வைத்தியஅதிகாரி டாக்டர் வி. நடராஜா கேட்டுள்ளார்.

களுத்துறை ஆஸ்பத்திரி வெளி நோயாளர்கள் சிகிச்சைப் பகுதிக்கு வெல்லம்பிட்டியில் வேலைபார்க்கும் ஒருவர் சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவருக்குப் பெரியம்மை நோய் இருந்ததாகக் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து களுத்துறை ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதி மூடப்பட்டுள்ளது.

# குருகுல ஆச்சிரமம் திருக்கேதீச்சரத்தில் ஆரம்பம்

## ரூ. 20,000 அமெரிக்க கடனுதவி

மன்னார், திங்கள்

"இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தக் குருகுல ஆச்சிரமம் குருக்கள் மார்களை உருவாக்குவதில் பெரிதும் உதவி செய்யும்" என திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுல ஆச்சிரமத்தின் ஆரம்பவிழாவின்போது பேசிய சேர் கந்தையா வைத்தியநாதன் குறிப்பிட்டார்.

குருகுல ஆச்சிரமத்தைக் கட்டுவதற்காக 20,000 ரூபா அமெரிக்கா உதவியளித்துள்ளதாக சேர் கந்தையா வைத்தியநாதன் தெரிவித்தார்.

இந்துமகாசபைக் காரியதரிசி திரு ஏ. சிவலிங்கம் திரு. ரீ. குமாரசாமிப்புலவர், திரு. வி. கந்தையா, திரு. எம். சின்னத்தம்பி, வவனியா கல்வி அதிகாரி திருமதி ஆர். நவரத்தினம் ஆகியோர் பேசினர்.

குருகுல ஆச்சிரமத்தை கனம் குமாரசாமிக் குருக்கள் திறந்துவைத்தார்.

## நாடகத்தின் பயன் குறித்து உடுப்பிட்டி எம். பி. உரை

மாவிட்டபுரம், திங்கள்

"நாடகங்கள், மனிதசமுதாயத்தில் உள்ள குறைபாடுகளையும் அவை திருந்த வேண்டிய வழிமுறைகளையும் இலகுவில் உணருவதற்காக ஏற்பட்டவை. நாடகம் மக்களிடையே செல்வாக்குப் பெறுவதற்கு யாழ்ப்பாணத்தில் முக்கிய காரணமாயிருந்தவர் கலையரசு சொர்ணலிங்கமேயாவர்."

இவ்வாறு குரும்பசிட்டி, உதயதாரகை சனசமூக நிலைய நிதிக்காக, யாழ். ஒறியன்ற் விளையாட்டு வளர்ச்சி, நுண்கலைச் சங்கத்தினர் நடத்திய 'இன்ப நாள்' என்னும் சமூக நாடகத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கூறினர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இவ்விழா நடைபெற்றது. கலையரசு சொர்ணலிங்கம் "மக்கள் முக்கியமாக சிறுவர்கள் விளையாட்டிலும் நாடகம் முதலிய கலைகளிலும் ஆர்வம் கொள்ளல் வேண்டும்" எனத்தமது பேச்சின் போது குறிப்பிட்டார்.

உதைபந்தாட்டத்தில்வெற்றி பெற்ற முதலாம், இரண்டாம் மூன்றும் பிரிவினருக்கு திரு. மு. சிவசிதம்பரம் வெற்றிக் கேடயங்களை வழங்கினர். சங்கக் காரியதரிசி, திரு. க. ஈசுவவரமூர்த்தி, நன்றிகூறினர்.

## சாம்பல்தீவில் திருட்டுக்கள் அதிகரிப்பு

### தொண்டர் குழு கண்காணிப்பு

திருக்கோணமலை, திங்கள்

சாம்பல்தீவுப் பகுதிகளில் பல இடங்களில் திருட்டுக்கள் நடந்துள்ளன. இதுகாரணமாக சாம்பல்தீவு மெதடிஸ்ட் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பொலிசாருக்கு உதவியாகத் தொண்டர்களைத் திரட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குப் பின்னர் கால் நடையாகச் செல்லுபவர்கள் தமது கைகளில் மின் விளக்குகளையோ 'லாந்தர்' விளக்குகளையோ எடுத்துச் செல்லவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. விளக்குகளை எடுத்துச் செல்லாதவர்களை விசாரணை செய்வதற்குத் தொண்டர் குழுவுக்கு அதிகாரமுண்டு. சாம்பல்தீவு பகுதி மக்களின் வேண்டுகோளின் பேரில் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## இந்தோனேஷியாவுக்கு 50 கோடி டாலர் ராணுவ உதவி

### ரஷ்யா அளிக்கும்?

ஜாகர்த்தா, ஜன. 29

மேற்கு நியூகினியை விடுவிக்கும் முயற்சியில் இந்தோனேஷியாவுக்கு 50 கோடி டாலர் பெறுமதியான ராணுவ உதவியை அளிக்க ரஷ்யா முன் வந்திருப்பதாய் ஜாகர்த்தாவில் அறிவிக்கப்பட்டது.



# மாணவர் மலர்



விஞ்ஞானம்

## இலை என்றால் என்ன?

— மகான் —

உலகில் நாம் காணும் பொருள்கள் அனைத்தையும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உயிருள்ள பொருள்கள், உயிரற்றபொருள்கள் என இருவகைப்படும். தாவரங்களும், விலங்கினங்களும் உயிருள்ளவை கற்பாறைகள், உலோகங்கள் முதலியன உயிரற்றன. முதலில் இரண்டுக்குமுள்ள முக்கிய வேறுபாடுகளைக் கவனிப்போம். உயிருள்ளவை சுவாசிக்கும் தன்மையும் பிறப்பு, வளர்ச்சி, இனப் பெருக்கம், இறப்பு வாழ்க்கையைக்கொண்டிருக்கும் ஆனால் உயிரற்றவை வளர்ச்சியோ அன்றி பிறபபு இறப்போ இல்லாதவை. சுவாசிககும் தன்மையையும் இவை இழந்திருக்கும். இது சம்பந்தமாக உங்களுக்கு ஒரு சிறு சந்தேகம் எழலாம். அதாவது வாழ்வற்ற பொருள்கள் வளர்வதில்லை என்றால், பெரும் மலைகளும், குன்றுகளும் எப்படி வளர்ச்சியடைந்தன" என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நல்ல கேள்வி இது.

நாம் காணும் மண்; பல நூற்றுண்டுகளுககு முன்னர் பெரிய பெரிய மலைகளும், கற்பாறைகளும் இடி மின்னல்களினாலும், மழையினாலும் தாக்குண்டு சூறுவளிக்காற்றுகளினால் பலஇடங்களுக்கும் அள்ளுண்டு சிறு கற்களாகி, பின்னர் மிகவும் சிறியவைகளாக, மண்ணாக மாறின. மலைகளும், கற்பாறைகளும் ஒரு நாளும் வளர்வதில்லை. வளரும் சக்தியும் அதற்கில்லை. ஆனால் பெரிய சூறுவளியினால் சிறு சிறு கற்களும், மண்ணும் அள்ளுப்பட்டு ஒன்ருக ஓரிடத்தில் குவிகின்றன, மேலும் மேலும் அதே இடத்தில் மண்ணும், சிறு கற்களும் ஒன்ருகச் சேர்வதினால் சிறு குன்றுபோல் தென்படுகிறது. இதுதான் இதன் சரித்திரத்தின் சுருக்கம். வாழ்வற்ற பொருள்களை விட வாழ்வுள்ளவைகளைத்தான் நாம் முக்கியம் அறிந்திருக்க வேண்டும். இம்முறை தாவரச் சிறப்புககளைப் பற்றி அறிவோம்.

இலைகளைப் பார்த்திருப்பீர்கள். இவற்றின் நிறம் பச்சை. தொழிற்சாலை எதையும்நீங்கள் போய்ப்பார்த்திருக்கிறீர்களா? ஒரு தொழிற்சாலையில் என்ன மாதிரியான வேலைகள் நடைபெறுகின்றனவோ அப்படியான வேலைகள் சாதாரண ஒரு இலையிலும் நடைபெறுகின்றன. அதாவது இலையும் ஒரு தொழிற்சாலைதான்! இதுபற்றி முன்னர் இங்கு எழுதியிருந்தோம். எதற்கும் இம்முறை இலையின் பொதுவான குணங்களைப்பற்றிக் கூறுகின்ருேம். நமக்கு வாய் இருப்பதுபோல், இலைகளுக்கும் வாய்கள் இருக்கின்றன. இலையின் பச்சை நிறமுள்ள பகுதிகளில் இதைக் காண முடியும். இலைகளில் உள்ள இவை, 'ஸ்ரோமாற்ரு' (Stomata) எனப்படும். காற்றிலுள்ள 'காபனீரொட்சைட்' (carbondioxide) இலைகளிலுள்ள வாய்களின் மூலமெடுத்து, வேரினால் பூமியிலிருந்து உறிஞ்சப்பட்ட நீரைக் கொண்டு, சூரிய ஒளியின் உதவியுடன் இலை உணவைத் தயாரிக்கின்றது. இதை, ஒளித்தொகுப்பு (photosynthesis) என்கின்ருேம். மேற் கூறப்பட்டது இலையின் ஒரு முக்கிய தொழிலாகும். இரண்டாவது தொழில், ஆவியுயிர்ப்பு (transpiration) தாவரங்கள் தங்குதடையின்றி, பெருமளவு நீரை உறிஞ்சுகின்றன. போதிய நீரை எடுத்துக் கொண்டு, மிகுதியை இலைகளிலுள்ள வாய்களின் மூலமாக வெளிவிடுகின்றன. ஆவியுயிர்ப்பு நடைபெறுவதால், விரைவாக புதிய நீரை பூமியிலிருந்து பெறவும் தேவையற்ற நீரை வெளியே விடவும் உதவுகிறது. இலைகளின் வாய்கள் இரவில் மூடப்பட்டிருக்கும். அதனல் பகலில்தான் அதிகமாக ஆவியுயிர்ப்பு நடைபெறுகிறது.

கருங்கக் கூறின், வேரினல் உறிஞ்சப்பட்ட நீரின் ஒரு பகுதியைத் தாவரங்கள், இலைகளிலுள்ள வாய்களின் மூலம் நீராவியாய் வெளிவிடுவதுதான் ஆவியுயிர்ப்பாகும்.

மூன்ருவது தொழிலான சுவாசித்தல் (respiration) ஒரு வகையில் முக்கியதாகத்தானிருக்கிறது. மனிதன் சுவாசிப்பது போல் தாவரங்களும் சுவாசக்கின்றன. ஆனல், மனிதனுக்கு உதவும் வகையில்தான் தாவரங்கள் செயல்படுகின்றன. தாவரங்கள், இலைகளின் வாய்களின் மூலம் 'ஒக்சிஜனை' (oxygen-பிராணவாயு) உட்கொண்டு, காபனீரொட்சைட்டை வெளிவிடுகிறது. ஆனல், ஒளித் தொகுப்பின்போது (பகலில்) காபனீரொட்சைட் உட்கொளளப்பட்டு ஒக்சிஜன் வெளிவிடப்படும். நாம் ஒக்சிஜனை சுவாசித்து, காபனீரொட்சைட்டை வெளிவிடுகின்ருேம். இதனல்தான், நாம் குடியிருக்குமிடத்தில் மரங்களை வளர்க்கின்ருேம. ஆனல் இரவு வேளையில் பெரிய மரங்களும், தாவரங்களும் காபனீரொட்சைட்டை வெளியே விடுவதால் இரவில் பெரிய மரங்களுக்குக் கீழ் நித்திரை செய்யக் கூடாது. இரவில் பெரிய மரங்களுக்குக் கீழ் நித்திரை செய்தால், பேய் பிசாசு கொன்றுவிடும் என்ற தப்பெண்ணம் அககாலத்திலும், இக்காலத்திலும் இருந்து வருகிறது. முன்னர் தெரிவித்தது போன்று இரவு வேளையில் மரங்கள் அசுத்த வாயுவை வெளிவிடுவது மனிதனுககு ஆகாதென்பதை, நாம் மனதில் மதித்துக் கொள்ள வேண்டும். தப்பெண்ணங்களுக்கு இடமளித்தல் ஆகாது.

இம்முறை இலையைப் பற்றி அறிந்துகொண்டோம். அடுத்த முறை, தோட்டத்தில் பறந்து திரியும் வண்ணாத்திப்பூச்சியின் வாழ்க்கை பற்றிய சுவையான செய்திகளை ஆராய்வோம்.

---

## சந்தேகம் தீருங்கள்

மாணவர்களாகிய உங்களுக்காகவேதான், இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. விஞ்ஞானம் வளர்ந்து கொண்டுபோகும் இக்காலத்தில், விஞ்ஞான விந்தைகளைப்பற்றி அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும். பாடசாலையில் படிக்கும் உங்களுக்கு சில சந்தேகங்கள் தோன்றலாம். பௌதிகம், இரசாயனம் அல்லது உயிரினம் பற்றிய சந்தேகங்கள் எழுந்தால், தபாலட்டையில் **சந்தேகம் தீருங்கள். மாணவர் மலர் 'ஈழநாடு', த பெ. எண்: 49. யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு தெரியப்படுத்துங்கள் விஞ்ஞானம் - கல்வி சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்கப்படும், எங்கே எழுதுங்கள் பார்க்கலாம். இம்முறை உதாரணத்துக்கு ஒரு கேள்வியும் அதன் பதிலும் வெளியாகியிருக்கிறது படித்துப்பாருங்கள்:

**கேள்வி:** ஒலியைப்பற்றி சிறிது கூறுவீர்களா?

**பதில்:** பொருள்களின் அதிர்வினலேயே (Vibration) ஒலி உண்டாகிறது. அமைதியான காற்றில் ஒலி ஒரு செக்கனுக்கு 1,100 அடி வேகத்திற்செல்லும். நீரில், மேற்கூறியதிலும் சுமார் ஐந்து மடங்குவேகத்திற் செல்லும் ஒளியின் வேகத்திலும் பார்க்க ஒலியின் வேகம் குறைவானதே. மின்னலும் இடியும் ஒரே நேரத்திலேயே ஏற்பட்டாலும், மின்னல் (ஒளி) தான் முதற் தோன்றும். பின்னரே இடி (ஒலி) கேட்கும்.

ஜி. எம்—


---

## காந்திஜி தபால் முத்திரைகள்

மகாத்மா காந்தியைக் கௌரவித்து அமெரிக்கா கடந்த வருடத்தில் வெளியிட்ட தபால் முத்திரைகள், நாளை கொண்டாடப்படும் இந்திய குடியரசுத் தினத்துடன் ஓராண்டைப் பூர்த்தியாக்குகின்றன.

அமெரிக்க தபால் இலாகா இம்முத்திரைகளை 1961-ம் ஆண்டு ஜனவரி 26-ல் வெளியிட்டது. இன்றும் இம்முத்திரைகள் அமெரிக்கா முழுவதிலும் ஆறுயிரம் தபால் கந்தோர்களில் பெருமளவில் விற்பனையாகிறது.

உலகத் தலைவர்களை கௌரவிக்கும்முகமாக அமெரிக்கா வெளியிடும் "விடுதலை" முத்திரை வரிசையில், சமீபத்தில் கௌரவிக்கப்பட்ட பத்தாவது தலைவர் காந்திஜி என்பது குறிப்பிடத்தக்கது.



மின்சார சக்தியில்லாத கிராமப்புறங்களுக்கு சூரிய சக்தியின்மூலம் மின்சாரம் விநியோகிக்க இக்கருவி உபுரிகிற ।

நிமிடக் கதை

## "150 ரூபாய் பரிசு"

"முதற் பரிசு ரூபாய் 150!" இதுதான் ரகுவின் மனதில் அடிக்கடி தோன்றி மறைந்தது. அன்று காலை 'மக்களன்பன்' தினசரியைப் படித்தது முதல் ரகுவின் சிந்தனையாவும் 'சிறுகதைப் போட்டியேதான்' மூழ்கியிருந்தது. கதையின் தலைப்போ கஷ்டமானதல்ல! ரத்தினச்சுருக்கமாக இரண்டு பக்கங்களில்சுவையான, ஹாஸ்யமான, கற்பனைக்கதையொன்றை அனுப்பினல் போதும். நல்லதென்றால் முதற்பரிசு ரூ. 150 கிடைத்து விடும்.

ரகுவின் சிந்தனை யாவும் கதையைப்பற்றியே இருந்தது. எந்தக் கதை எழுதலாம்? எப்படி அமைக்கலாம்? ஹாஸ்யத்தை அதற்குள் எப்படிப் புகுத்தலாம்? இளம் எழுத்தாளரான ரகுவுக்கு அன்று ஏனோ தெரியாது ...... கற்பனைத தேர் ஓடவே மறுத்தது

சுழலும் நாற்காலியில் இருந்துகொண்டான். வலது கையில் பேனா...... பேனவுடன் பேசிக்கொண்டிருந்த அவனது கற்பனை. பெருவிரல் தலையைச் சொறிந்துகொண்டிருந்தது... ரகுவின் கண்கள் கூரையை நோக்கின... கற்பனைத் தேர் ஓடத்தொடங்கியது. ஆ... கதை பிறந்துவிட்டது! சுவையான கதை! ஹாஸ்யக் கதை! உண்மைக்கதை! சிறந்த கதை.

150 ரூபாவுக்காக தனது சக்தியை வீணக்க விரும்பாத ரகு, தனது படுக்கையில் படுத்து ஒரு நிம்மதியான நித்திரை கொள்ளலாமென நினைத்து பக்கையில் படுக்கப்போனன். அந்த நேரத்தில் தான் அவனுக்கு அருமையானஹாஸ்யம் தோன்றியது. உடனே அதை எழுத்தோவியமாகப் படைத்து தபாற்பெட்டிக்குள் போட்டுவிட்டான். பிறருக்கு ஆச்சரியமாக இல்லாவிட்டாலும் அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆம் அவன் எழுதிய கதைக்கு ரூ. 150 பரிசு கிடைத்ததென்றால் அவனுக்கு ஆச்சரியமாக இராதா?

இத்தனைக்கும் அவன் எழுதியது என்ன தெரியுமா?

தான் கதை எழுதுவதாக கனவில் கண்டதாகவும் அந்தக் கதைககு 150 ரூபாய் பரிசு கிடைத்ததாகவும் ஒரு கதையை எழுதி அதற்குக்கீழ் 'யாவும் கற்பனை' என்றும் எழுதியிருந்தான்.


மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மோனரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன் மயில் - ரோஸ் அடையாள மிட்டு

MONARA PAPPADAM TRADE MARK 19502
ROSE FLOWER BRAND BEST PAPPADAM REGD. TRADE MARK No 18255 A. M. BUHARI 99, 4TH CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது

தயாரிப்பவர்கள்
ஏ. எம். புகாரி அன் கோ.
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# ஆசிரியர் தட்டுப்பாடு வவனியாவில் நீங்கியது

முள்ளியவளை, திங்கள்

வவனியாத் தொகுதியிலுள்ள மகாவித்தியாலயங்களின் ஆசிரியர் பற்ருக்குறை பற்றிக் கல்வி அதிகாரிகளிடம் வற்புறுத்தப்பட்டதன் விளைவாக வித்தியானந்தக் கல்லூரிக்கு விஞ்ஞான, கலைப் பட்டதாரிகள் இருவரும், வவனியா மகா வித்தியாலயத்துக்கு விஞ்ஞானப் பட்டதாரி ஒருவரும் 1-3-62-ல் நியமனம் பெற்றுள்ளனர்.

ஏனைய பாடசாலைகளிலுள்ள காலியான இடங்கள், ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள இடங்களிலிருந்து மாற்றம் செய்யப்படுவதன் மூலம் நிரப்பப்படலாம எனத் தெரியவருகிறது.

## பகல் இரவாகியது!

முள்ளியவளை, திங்கள்

கடந்த வெள்ளிக்கிழமை காலை 'யாழ்தேவி'யில் கொழும்பிலிருந்து மாங்குளம் புறப்பட்ட வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், "இன்று காலை ரயிலில் புறப்படுகிறேன்; மாங்குளம் ஸ்டேசனுக்குக் கார் அனுப்புக" என தண்ணீரூற்றிலுள்ள தமது இல்லத்துக்குத் தந்தியடித்துவிட்டு, மாங்குளம் வந்தார்; கார் வரவில்லை. காத்திருந்தும் பயனில்லாமற் போகவே, பஸ்ஸில் ஏறி வீடு வந்துசேர்ந்தார், வீட்டிலுள்ளோர் அதிசயப்பட்டனர்!

காரணம், அவர் அனுப்பிய தந்திச்செய்திதான்! அதில் காணப்பட்டது இது: "இன்று இரவு ரயிலில் புயப்படுகிறேன்; மாங்குளம் ஸ்டேசனுக்குக் கார் அனுப்புக".

## பாலத்தின் ஆபத்து

முள்ளியவளை, திங்கள்

மாங்குளம்—முல்லைத்தீவு ரோட்டில் குருவிச்சை ஆற்றிலுள்ள பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளது. ஆற்றில் வெள்ளம் ஓடுகிறது.

வாகனப் போக்குவரத்துக்களெல்லாம் தடைசெய்யப்பட்டுள்ளதாக, முல்லைத்தீவு பொது வேலைபகுதி இஞ்ஜினியர் அறிவித்துள்ளார் பஸ்களும், லொறிகளும் தண்ணீரூற்று-முள்ளியவளை - நெடுங்கேணி-ஒட்டுசுட்டான் மார்க்கமாக மாங்குளம் செல்லுகின்றன.

## கடிகாரம் களவு; 6 வாரம் சிறை

மன்னர், ஞாயிறு

மன்னர் பேககரி ஒன்றில் களவாடப்பட்ட கைக்கடிகாரத்துடன் பிடிபட்ட கீன் பண்டா (20 வயது) மன்னர் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். என். இராசதுரை, முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார். மகோவைச்சேர்ந்த கீன்பண்டாவைக் குற்றவாளியெனக் கண்டதன்பேரில் நீதிபதி 6 வார சிறைத்தண்டனை விதித்தார்.

## கடற்சுழியில் அகப்பட்டவர் காப்பாற்றப்பட்டார்

வேலணை, திங்கள்

வேலணை கிழக்கைச் சேர்ந்த சபாபதி இராசகோபால் (வயது 45) என்பவர் தனது சிநேகிதர்களுடன் வெள்ளக் கடற்கரை பள்ளிவாசல் என்ற இடத்தில் நண்பர்களுடன் நீந்திக்கொண்டிருந்த சமயம் ஒரு பெரிய கடற்சுழியில் அகப்பட்டு, பரிதாபமான நிலையில் அவஸ்தைப்பட்டதைக் கண்ட இவரின் நண்பர்கள் சிலரின் முயற்சியால் கரைக்குக் கொண்டுவரப்பட்டு முதலுதவி அளித்து உயிர் தப்ப வைத்தார்கள். இச்சம்பவம் கடந்த ஞயிற்றுக்கிழமை நடைபெற்றது.

## யாழ்ப்பாணத்தில் தியாகராஜ உற்சவம்
### மூன்று தினங்கள் நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தியாகராஜ ஞாபகார்த்த உற்சவத்தை பெப்ரவரி மாதம் 23-ம் 24-ம் 25-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடாத்துவதென அகில இலங்கை இசையாசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இச்சங்கத்தின் கூட்டம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இசையாசிரியர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த உற்சவத்தை நடாத்துவதற்குப் பொறுப்பாக சங்கீத பூஷணங்களான ஏ. சோமசுந்தரம், ஆர். நடராசா, எம். வர்ண குலசிங்கம், எஸ். இரத்தின சபாபதி, கே. குமாரசாமி ஆகியோரைக் கொண்ட விசேட நிர்வாகக்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# மரணதண்டனை மசோதாவுக்கு விமலவன்சதேரோ எதிர்ப்பு

கந்தனகெதர, திங்கள்

"அப்பீல் நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மரணதண்டனை விதிக்கும்வகையில் சட்டத்தை மாற்றியமைப்பதுபற்றி தலைசிறந்த பௌத்தநாடான இலங்கை வெட்கப்படவேண்டும்."

இவ்வாறு பத்தேகம விமலவன்ஸ தேரோ இங்குள்ள தர்மராஜா ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது குறிப்பிட்டார்.

விமலவன்ஸதேரோ மேறும் கூறியதாவது:-

பௌத்தசமயக் கொள்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விதம் செய்வது மிகவும் அவமானத்துக்குரிய விஷயம்.

மரணதண்டனை (விசேஷ ஷரத்துகள்) மசோதாவை நடைமுறைக்குக் கொண்டுவருவதால் சிறிமாவோ அரசாங்கம் எவரது கழுத்திலும் கயிற்றை மாட்டக்கூடியதாகவிருக்கும். தனிமனிதனின் சுதந்திரத்துக்கு இது அபாயம் விளைவிப்பதாக இருக்கும்.

சிலரது நடவடிக்கையால் பௌத்த சாசனம் அபாயகரமான நிலையிலிருக்கின்றது.

பௌத்த சங்கத்தின்மீது சிறிமாவோ அரசாங்கம் சட்டதிட்டங்களை விதிப்பது பௌத்தசமயத்தை சீர்குலைப்பதாக இருக்கும்.

## ஆனைக்கோட்டையில் அஷ்டகிரக வழிபாடு

ஆனைக்கோட்டை, திங்கள்

அஷ்டகிரக கூட தோஷ நிவாரண யக்ஞம் 14-1-62 முதல் தினசரி மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை வேதசிவாகம முறைப்படி விமரிசையாக நடைபெற்று வருகின்றது. மகாயக்ஞமும், கோளறுபதிகம், கந்தரனுபூதி பாராயணமும் இடம் பெறுகிறது. 11-2-62ல் மகாயக்ஞ பூர்த்தியும் 12-2-62ல் சகஸ்திர சங்காபிஷேகமும் நடைபெறும்

## தெலுங்கு கலைக்களஞ்சியம்

ஹைதராபாத், ஜன. 29

தெலுங்கு கலைக் களஞ்சியத்தின் மூன்று தொகுதிகள் நேற்றுஹைதராபாத்தில் வெளியிடப்பட்டது. தெலுங்கு இலக்கியம், நிதி, வர்த்தகம், பூகோளம், உலக இலக்கியம் ஆகியவைகள் பற்றியவை இத் தொகுதிகள். இத் தொகுதிகளின் வெளியீட்டு விழாவுக்கு ராஷ்டிரபதி ராஜன்பாபு, உப ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன், பிரதம மந்திரி நேரு, திரு. சி. டி' தேஷ்முக் ஆகியோர் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தனர்.



# 'கடல்வளம் வட, கிழக்கு மாகாணங்களின் தங்கச் சுரங்கம்'

—இராசமாணிக்கம்

## தொண்டமானறு கடலில் தமிழ் எம். பிக்கள் மீன்பிடித்த சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
எம். பி. க்கள் இருவர் நேற்று தொண்டமானறு கடலில் மீன்பிடித் தொழிலாளர்களுடன் தாமும் கட்டுமரத்தில் சென்று பலமணி நேரம்வரை மீன்பிடித்தனர். ஒரு மணித்தியாலத்தில் சுமார் 10 ருத்தல் இருல் பிடித்திருக்கின்றனர்.

தொண்டமானறு கடற்கரையில் பெருந்திளராகக் கூடியிருந்த கடற்றெழிலாளர்களோடு குறிப்பிட்ட இரு எம். பி. க்களான தடைசெய்யபபட்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. இராசமாணிக்கமும், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும் கடற்றெழிலாளர்கள் பிரச்சினைகள் பற்றி பேசினர்.

யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருந்த திரு இராசமாணிக்கம் பிரயாணத்தை முடித்துக்கொண்டு நேற்று பட்டிருப்புக்குத் திரும்பினர். இப்பிரயாணத்தின் போது யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டதோடு பலபிரமுகர்களையும் கண்டு உரையாடினர்.

அவரது சுற்றுப் பிரயாணத்தின் போது அவரும் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைத்தினமும் தொண்டமானறு கடலில் மீன்பிடிப்பதில் புலமணி நேரம் கழித்தனர்.

அங்கிருந்து வெளியே வந்த திரு. இராசமாணிக்கம் பின் வருமாறு தமது அபிப்பிராயத்தை தெரிவித்தார்:-

நாங்கள் மீன்பிடித் தொழிலாளர்களுடன் அவர்களுடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினேம். ஒருநாளில் சிலசமயம் எழுபது ரூபாய்வரை இத்தொழிலின் மூலம் வருவாய் கிடைப்பதாகவும் ஆனல் சராசரி வருமானம் நாளொன்றுக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு அதிகமாகக் கிடைப்பதாகவும் மீன் விற்பனை ஸ்தலத்திலேயே கடைபெறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வட,கிழக்கு மாகாணங்களில் கடல்படு செல்வங்களை விருத்தியாக்குவதின் மூலம் எமது பொருளாதாரத்தை வளம்பெறச் செய்யலாம் பண்டைய முறைப்படி கட்டுமரத்தில் சென்று மீன்பிடிப்பவர்கள் இவ்வளவு இலாபம் பெறமுடியுமானல் நவீனமுறைகளில் மிகுந்த லாபம் பெறுவது சாத்தியமே. இவற்றில் சாதி சமய வேறுபாடின்றி இளைஞர்கள் தொழிலில் ஈடுபட வேண்டும்.

மீன்பிடித் தொழிலைப் பொறுத்தவரையில் வட,கிழக்கு மாகாணங்கள் தங்கச் சுரங்கங்களாகும் இவற்றை விருத்தியாக்கி எமது பொருளாதாரத்தை வளமாக்க வேண்டும்.

இதேபோன்ற நவீனமுறையில் விவசாயம், கோழிவளர்த்தல் போன்ற தொழில்களையும் இப்பகுதிகளில் விருத்தியாக்குதல் அவசியம்.

## இலங்கையில் 10,000 கண் பார்வையற்றவர்கள்

கொழும்பு, திங்கள்
இலங்கையில் சுமார் 40,000 பேர் வலது குறைந்தவர்களாக இருக்கிறர்கள் என அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிடைத்துள்ள புள்ளி விபரங்களின்படி பத்தாயிரம் பேர் கண்பார்வையற்றவர்கள் எனத் தெரிகிறது. 1958-ல் 1,500 ஆக இருந்த குருடர்கள் தொகை இப்போது பத்தாயிரமாகியுள்ளது. செவிடர்கள் தொகையும் அதிகரித்துள்ளது.

7,500 ஆக இருந்த செவிடர்கள் தொகை இப்போது 9,000 ஆக அதிகரித்துள்ளது.

வலது குறைந்தவர்களில் முடவர்கள் தொகையே அதிகம். 14,500 பேர் முடவர்கள் எனத் தெரிகிறது. வலிநோய் உடையவர்கள் தொகை 2,400. சித்த சுவாதீன மற்றவர்கள் தொகை 2,100. 354 பேர் பார்வை, கேள்வி இரண்டுமற்றவர்களாம். 5 வயதுக்குட்பட்ட 500 பிள்ளைகள் முடமாக இருக்கிறர்கள். 41 வயதுக்கு மேற்பட்ட 6751 பேர் முடவர்களாக இருக்கின்றனர்.

சுமார் 2,500 குருடர்கள் விவாகம் செய்திருக்கின்றனர். இவர்களில் அநேகம் பேர் உடற்குறைபாடு எதுவுமில்லாதவர்களையே விவாகம் செய்துள்ளார்கள் இந்த விவாகங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு திருப்தியுடையனவாக இருக்கின்றன.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

•

யாழ்ப்பாணம் மனோகரா வி. நாகேஸ்வரராவ்-சாவித்திரி நடித்த சந்தானம் (தமிழ்)

•

சாவகச்சேரி தேவேந்திரா மகேய புத்தா (சிங்களம்) பேசும் படம்.


**3வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)
விஜிதா (மஸ்கெலியா) தியொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன, ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்
நடித்த
**பாச மலர்**
திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
மாதர்களுக்கு மாத்திரம் 2-2-62 வெள்ளிக்கிழமை மாலை 2-15 க்கு விசேஷ மெட்னி காட்சி காண்பிக்கப்படும்.

மனோகரா (யாழ்ப்பாணம்)
வி. நாகேஸ்வரராவ், சாவித்திரி
நடித்த
**சந்தானம்**


## இராமாயண கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராசப் பெருமாள்கோவிலில்முத்தமிழ்மணி எஸ். எஸ். மணிபாகவதர் கடந்த சனிக்கிழமை தொடக்கம் இராமாயண கதாகாலட்சேபம் செய்து வருகிறர். தினமும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகத்துடன பிரசங்கம் முடிவுறும்.

—

## "பொருளாதார விருத்திக்கு இளைஞர் உழைக்கவேண்டும்"

அளவெட்டி, திங்கள்
"பொருளாதார விருத்திக்கு இளைஞரின் முயற்சி இன்றியமையாதது. படித்த இளைஞர்கள் உத்தியோக மோகத்தைக் கைவிட்டுப் பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுத் தமது வாழ்க்கையை வளம்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இன்றுநாம் வாழ்கிறேம் என்பதை மறத்தலாகாது. விவசாயம் என்றல் கமத்தொழில் மாத்திரம் அல்ல. கோழிப்பண்ணை, மந்தை வளர்ப்பு, தேனீவளர்ப்பு, நெசவு என்பனவும் விவசாயத்தின் அங்கங்களேயாகும். இளைஞர் விவசாயக்கழக உறுப்பினர்களாகிய இளைஞர்கள் பல தொழில் துறைகளிலும் ஈடுபட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்குதல் தமக்கும் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் செய்யும் சேவையாகும். கழக உறுப்பினர்கள் மாத்திரமன்றி படித்த இளைஞர்களும் சேர்ந்து இப்பணியில் ஈடுபடுதல் வேண்டும்".

இவ்வாறு சென்ற சனிக்கிழமை நடைபெற்ற அளவெட்டி இளைஞர் விவசாயக்கழக விசேஷ பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இளைப்பாறிய விவசாயப் பகுதித் தலைவர் திரு. எம். ஆர். எம். ஜெயரத்தினம் குறிப்பிட்டார் வலிகாமம் வடக்குப் போதனசிரியர் திரு. வரதராஜா விவசாயக்கழக சேவையில் மாணவர் முயற்சி பற்றி எடுத்துரைத்தார். கழகக் காரியதரிசி நன்றி தெரிவித்தார்.

—

## மரணதண்டனை திருத்த மசோதா
### கிராமக் கமிட்டி கண்டனம்

களுத்துறை, திங்கள்
மெலவன்பட்டி கிராமக்கமிட்டியின் விசேஷ கூட்டமொன்றில், மரணதண்டனை (விசேட விதிகள்) மசோதாவுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையைக் கிராமக் கமிட்டித் தலைவர் திரு. எச். எஸ். சில்வா பிரேரிக்க திரு. சமதபால பெர்னண்டோ ஆமோதித்தார்.

கிராமக் கமிட்டித் தலைவர் திரு. எச். எஸ். சில்வா பேசுகையில், மரணதண்டனை திருத்தமசோதா ஜனநாயகத்திற்கு முரணனதும் நாட்டுக்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் கொண்டுவரும் என்றும் கூறினர்.

—

## 14 வைகவுண்ட் விமானங்கள்

புதுடில்லி, ஜன. 29
இந்தியாவில் இப்போது 14 வைகவுண்ட் விமானங்கள் சேவை செய்துவருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## உணவுப் பொருள்களின் விலை உயர்த்தப்படமாட்டாது

கொழும்பு, திங்கள்
கப்பல் கட்டண அதிகரிப்பு காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படமாட்டாது என உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ரங்கூனிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள மீது மட்டுமே கப்பல் கட்டணம் அதிகமாகவிருக்கும் என அவர் கூறியுள்ளார். ஒரு தொன்னுக்கு 60 ரூபாய் விதம் கப்பல் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு ருத்தல் மீதும் 1/3 சதம் மட்டுமே கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.


**மகரத்தில் கிரகங்கள் - மக்கள் வாழ்வில் என்ன?**

மகர இராசியில் எட்டுச் கிரகங்கள் ஒன்றுகூடுவதால் உங்களது வாழ்விலே நடப்பவற்றை நீங்கள் தெளிவாக அறிய உதவக்கும் நூல் யாழ்ப்பாணத்து வாக்கிய பஞ்சாங்கப்படி,

சோதிட ஆசான் செ. தெல்லியூர்
எழுதியது.

விரிவாகவும் தர்க்கரீதியாகவும்
1962 முதல் பின் பல்லாண்டுகளுக்குரிய பலன்களை படித்தறிக.

தனிப்பிரதி: விலை ரூ. 1-00

இங்கும் கிடைக்கும்:
த. தம்பித்துரை
நியூஸ் ஏஜன்ட் யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு:
பூபாலசிங்கம் புத்தகசாலை
21, பெரியகடை, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.